தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியினால் தொழில் வரி விதிக்கப்படுவதற்காக, 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண் 15/1971) II ஆம் விவர அட்டவணையின் 17 (1)-வது விதியிலும், மேற்படி சட்டத்தின் 132-வது பிரிவிலும், வரி வீதங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. மேற்படி விதியை ஒட்டி ரூ. 600-க்கு மேற்பட்டும் ரூ.1,200-க்கு உட்பட்டும் அரை ஆண்டு வருவாய் பெருவோர் ஒன்பதாம் வகை வரி விதிப்புத் தொகுதியைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு ரூ. 3 என்ற பேரளவுத் தொகைக் குட்பட்டு, அரை ஆண்டு தொழில் வரி விதிக்கப்படும்.

மதுரை மாநகராட்சி மன்றம் 25—9—1971 நாளிட்ட தனது 514-வது தீர்மானத்தில் அரை ஆண்டிற்கு ரூ. 1,200-க்கு குறைவாக வருவாய் பெறும் எல்லா நபர்களுக்கும் (அரசிதழ் பதிவுபெறு அரசு ஊழியர் உட்பட) தொழில் வரி விதிப்பாகிய ரூ. 2-லிருந்து, 1972-73-ம் ஆண்டு முதல் விலக்களிக்க அரசைக் கேட்டுக்கொண்டது.

இது குறித்து பரிசீலித்தபின்னர், சென்னை மாநகராட்சியின் இதுபோன்ற கோரிக்கை ஒன்று ஏற்கனவே ஏற்கப்பட்டுள்ளதால், 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் II -ம் விவர அட்டவணையில் 17 (1) வது விதியில் ஒன்பதாவது வகையைச் சேர்ந்தவர்களுக்குத் தொழில் வரி விதிப்பினின்று 1—4—1972 முதற்கொண்டு விலக்களிக்க அச்சட்டத்தின் 116 ஆம் பிரிவு மூன்றும் விலக்கின்கீழ் அரசு அனுமதி அளித்தது. மேற்படி ஆணையைத் தொடர்ந்து, அவர்களுக்குப் பரிகாரம் அளிப்பதற்கு ஏற்றவாறு 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் II-வது விவர அட்டவணையில் 17 (1) வது விதியைத் திருத்த தற்போது கருதப்பட்டுள்ளது. அதற்குச் சட்டமியற்ற வேண்டியது அவசியமில்லை. ஆனால், அதற்குப் பதிலாக 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 431 (5) பிரிவின் கீழ் மேற்படி சட்டத்தின் II -வது விவர அட்டவணையில் திருத்தக் கருதியுள்ள வரைவுத் திருத்தம் மாநிலச் சட்டமன்றத்தின் இரு அவைகளின் முன்பும் வைக்கப்பட்டு அவற்றின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

இதற்கிணங்க நான் இதற்கு அவையின் ஒப்புதலை வேண்டுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.